No.C.03/2025 06.02.2025

# ஆயரின் சுற்றுமடல்

**அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, துறவியரே, பொது நிலை இறைமக்களே,**

வாழ்த்துகள் !

கிறிஸ்து பிறப்பின் 2025 ஆம் ஆண்டினை யூபிலி ஆண்டாக "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்னும் கருப்பொருளில் சிந்தித்துப் பயணிக்கத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளதைத் தொடர்ந்து, உலகளாவிய திருஅவையோடு நமது கோட்டாறு திருஅவையும் பல்வேறு சிறப்புச் செயல்பாடுகளை முன்னெடுத்து செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இவ்வேளையில் யூபிலி 2025 கொண்டாட்டங்களை ஒருங்கிணைக்கும் மறைபரப்புப்பணிக்கான திருப்பேராயம் யூபிலியின் ஏழு சிறப்பியல்புகளை முன்வைக்கின்றது. அவற்றுள் முதன்மையாக (அ) பல தளங்களைத் தாண்டி தோழர்களுடன் உரோமைக்குத் திருப்பயணம் செய்வது, (ஆ) புனித வாயில் வழியாக "இயேசுவே வாயில்" என்னும் மனஉணர்வோடு உரோமை நகரின் நான்குப் பேராலயங்களில் நுழைவது போன்றவை அடங்கும்.

யூபிலி ஆண்டின் சிறப்பு நிகழ்வான திருப்பயணம் எல்லைகளைக் கடந்து பயணிக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றது. எல்லைகளை மட்டும் அல்ல; நம்மை இன்று மற்றவர்களிடமிருந்து பிரிக்கும் தடைகளான மொழி, நிறம், இனம், சாதியம் இவற்றையும் கடந்து நம் இலக்கை நோக்கிப் பயணிக்கும் திருப்பயணத்திற்கு இது நம்மை அழைக்கின்றது.

ஆகவே, நமது மறைமாவட்ட சூழலுக்கேற்றபடி, இந்தப் புனித யூபிலி ஆண்டில், புனித திருத்தலங்களை தோழமை உணர்வோடு திருப்பயணிகளாகச் சந்தித்து திருஅவையின் நம்பிக்கையாளராகிய நமக்கு, 'பேறு பயன்', 'பாவத்தண்டனை நீங்கச் சலுகை' எனப்படும்

சிறப்பு ஆசியைப் பெற்றுக்கொள்ள ஏழு புனித தலங்களை மறைவட்டத்திற்கு ஒன்று வீதம், மறைமாவட்டத் திருத்தலத்தையும் உள்ளடக்கி அறிவிக்க விரும்புகின்றேன். அவை பின்வருமாறு : 1. புனித சவேரியார் பேராலயம், கோட்டாறு 2. மறைசாட்சி புனித தேவசகாயம் மவுண்ட், ஆரல்வாய்மொழி 3. புனித சகாய மாதா திருத்தலம், சகாயபுரம் 4. புனித அலங்கார உபகார அன்னை திருத்தலம், கன்னியாகுமரி 5. புனித அந்தோனியார் திருத்தலம், பெரிய காடு 6. புனித லூசியா திருத்தலம், புதூர் 7. புனித ஹெலனா ஆலயம், இனையம்.

இவ்வேளையில் யூபிலி ஆண்டில் பல்வேறு சிறப்புச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் உங்களைப் பாராட்டுகின்றேன். இன்னும் ஆர்வத்தோடு நம்பிக்கை தரும் செயல்பாடுகளைத் தொடர அன்போடு வேண்டுகின்றேன். ‘‘எதிர்நோக்கின் திருப்பயணிகள்’’ ஆண்டில் அருள் வாழ்வை புதுப்பிக்கவும், நம்பிக்கை இழந்தோருக்கு நம்பிக்கையை வலுப்படுத்தும் தோழமை உணர்வுடன் திருப்பயணம் செல்லவும் அன்போடு வாழ்த்துகின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்.

---

**குறிப்பு :** இந்த அறிவிப்பானது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் 09.02.2025 ஞாயிறன்று திருப்பலியில் அறிவிப்பின்போது வாசிக்கப்பட வேண்டும்.